<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

<u>**OS – 226/2021**</u>

நாள் 14.07.2025

DW1 – C. தங்கமணி

க/பெ – சின்னசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2025.)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. சின்னேகவுண்டர் என்பவருக்கு நஞ்சப்ப கவுண்டர், சின்னிய கவுண்டர் என்ற இருமகன்கள் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சின்னிய கவுண்டர் ஆகும். எனது தாத்தாவுக்கு சின்னிய கவுண்டர், கருப்ப கவுண்டர், ராமசாமி கவுண்டர் ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். 1934 ம் ஆண்டின் பத்திரப்படி தான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். அந்த பத்திரப்படி சின்னிய கவுண்டர் மக்கள் நஞ்சப்ப கவுண்டர், சின்னிய கவுண்டர், கருப்ப கவுண்டர் மக்கள் செல்லப்ப கவுண்டர், கருப்ப கவுண்டர், செல்லப்ப கவுண்டர் மகன் செங்காளியப்பன் ஆகியோர் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் சி அயிட்ட சொத்தாக செல்லப்ப கவுண்டர், கருப்ப கவுண்டர் ஆகிய இருவருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டு, அதன்படி 1.46 ஏக்கர், 1.22 ஏக்கர், 14 சென்ட் ஆக மொத்தம் 2.88 ஏக்கர் சொத்து அந்த செல்லப்ப கவுண்டர், கருப்ப கவுண்டருக்கும் பாத்தியம் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரப்படி எனது தாத்தா சின்னிய கவுண்டருக்கு சர்வே எண்.685 காலையில் 1.29 ஏக்கர், 1.08 ஏக்கர், 0.13 சென்ட் ஆக மொத்தம் 2.50 ஏக்கர் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அது தவறு. அதில் 1.08 ஏக்கர் சொத்தை எனது தாத்தா சின்னிய கவுண்டர் அவரது மக்கள் கருப்ப

கவுண்டர், சின்னிய கவுண்டர், ராமசாமிகவுண்டர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து சின்னிய கவுண்டர் மகன் நஞ்சப்ப கவுண்டருக்கு 17.08.1939–ம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி விற்று விட்டார்கள் என்றால் சரிதான். சின்னிய கவுண்டருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 2.50 ஏக்கரில் மேற்படி வீதம் 1.08 ஏக்கர் சொத்தை விற்றது போக மீதம் 1.42 ஏக்கர் மட்டும் தான் சின்னியகவுண்டருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் தவறு, 1.50 ஏக்கர் உள்ளது. அந்த 1.50 ஏக்கர் சொத்தைப் பொறுத்து சின்னிய கவுண்டரும் அவரது மகன்களான கருப்ப கவுண்டர், ராமசாமி கவுண்டர், சின்னிய கவுண்டர் ஆகிய மூவரும் சேர்ந்து 05.04.1956–ம் தேதியில் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் சர்வே எண்.685–ல் சின்னியகவுண்டருக்கும், ராமசாமி கவுண்டருக்கும் கூட்டாக 1 ஏக்கர் பூமியும், அவருடைய மற்றொரு மகன் சின்னிய கவுண்டருக்கு 50 சென்ட் நிலமும் பாகமாக ஒதுக்கினார்கள் என்றால் சரிதான்.

2. பின்னிட்டு ரங்கசாமி கவுண்டர் மகன் ரங்கப்பன் என்பவர் தனக்கு வரவேண்டிய கடன் தொகைக்காக மேற்படி சர்வே எண்.685 காலையில் 1 ஏக்கர் பூமியை பொறுத்தும், மற்ற சொத்துக்களை பொறுத்தும் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.378/1960 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் தீர்ப்பு பெற்று நிறைவேற்று மனு எண்.74/1962 மனு தாக்கல் செய்து அவரே சொத்தை ஏலத்தில் எடுத்து சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். மேற்படி வீதம் சொத்தில் ஏலத்தில் போனது போக மீதம் 50 சென்ட் மட்டும் தான் எங்களுக்கு இருந்து வந்தது என்றால் எங்களுக்கு 75 சென்ட் இருக்கிறது. அந்த ஏலத்தில் எடுத்த 1 ஏக்கர் சொத்தில் 1/4 பங்கு சொத்தை

அம்மாசியக்காள் என்பவரிடமிருந்து 1–ம் வாதி கருணையம்மாள் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1989–ம் ஆண்டில் ஏற்பட்ட நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் படி சர்வே எண்.685– ஆனது உட்பிரிவு ஆகி விட்டது என்றால் சரிதான். அதன்படி சர்வே எண்.685/2–ல் 70 செண்ட் உட்பிரிவு ஆகி விட்டது என்றால் சரியல்ல, 75 செண்ட்டுக்கு உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. அதேபோல், சர்வே எண்.685/9–ல் யார் பெயருக்கு உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. அந்த சர்வே எண்.685/9 ஆனது 1–ம் வாதி கருணையம்மாள் பெயரில் உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. 1956–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.685–ல் நான் சொல்லும் 13 செண்ட் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த 13 செண்ட்டுக்கு ஈடாக 1956 பாகப்பிரிவினை பத்திரத்தில் 1.50 ஏக்கராக ஒரே இடத்தில் ஒரே இனமாக சேர்த்து கொடுத்து விட்டார்கள் என்றால் இல்லை.

3. 1934–ம் ஆண்டில் இருந்து மேற்படி 13 செண்ட்டை எனது தாத்தா, எனது அப்பா அவர்களைத் தொடர்ந்து நானும் அனுபவித்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் எனது சகோதரி ஜோதிமணி அ.வ.எண்.99/2018 என்ற வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எங்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டட IA.No.85/2018 என்ற சமரச மனுவை தாக்கல் செய்து அதில் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சமரச தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் சர்வே எண்.685/2,9 காலைகளில் உள்ள பூமிகளை சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்போது சர்வே எண்.685/9 சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் அந்த

வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த சர்வே எண்.685/9 ஆனது 1–ம் வாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சமாதான வரைபடத்தில் மேல்புறம் வாதிகளுக்கும், கிழபுறம் எங்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். சர்வே எண்.685/9–ல் 13 சென்ட்டை பொறுத்து எங்களுக்குள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த 13 சென்ட்டுக்கு கூட்டுப்பங்குதாரர்கள் என்று அந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண்.685/9– உட்பிரிவு ஏற்பட்ட காலத்திலிருந்து வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால், சர்வே எண்.685/9–ல் எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அந்த சொத்தை அபகரிக்க வேண்டி தான் நானும், எனது சகோதரியும் மேற்படி முன்வழக்கை தாக்கல் செய்து அதில் சர்வே எண்.685/9–யும் சேர்த்து சமரச தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் அந்த சமரச தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தான 13 சென்ட்டில் எங்களுக்கு எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.14 15:11:26 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**